பொ.எழிலன்,
1, ஜாலான் பெசார்,
தாமான் உத்தாமா,
08000 ஜித்ரா,
கெடா.

19 அக்டோபர் 2021

ஆருயிர் நண்பன் _____,

உன் கடிதம் கிடைத்தது. நன்றி. இங்கு அப்பா, அம்மா, அண்ணன் மற்றும் தங்கை அனைவரும் நலம்.

எதிர்வரும் பள்ளி _____ என்னை உன் தோட்ட இல்லத்திற்கு அழைத்திருந்தாய். மிக்க மகிழ்ச்சி. என் பெற்றோரிடம் அனுமதி கேட்டுள்ளேன். அவர்கள் நிச்சயம் _____ தெரிவிப்பார்கள் என நம்புகிறேன்.

உன் தோட்ட இல்லத்தைப் பற்றி முந்தைய _____ குறிப்பிட்டிருந்தாய். அங்குள்ள சில இடங்களில் நான் என்ன கற்று கொள்ளலாம் என்று ஒரு _____ மனதிற்குள் தயார் செய்துள்ளேன்.

கால்நடைப் பண்ணையும் மீன் பிடிக்கும் குளமும் இருப்பதால் அங்கிருக்கும் பிராணிகள் என்னிடம் எவ்வாறு நடந்து கொள்ளும் என ஆவலாக உள்ளேன். எனக்கு நாய் மற்றும் _____ என்றால் மிகவும் பிடிக்கும். அவற்றோடு விளையாடக் காத்திருக்கின்றேன். புதிதாக வேறு பிராணிகள் ஏதும் உள்ளனவா? எனக்கு மீன் பிடித்த அனுபவம் இல்லை. அதை நீ எனக்குச் சொல்லிக் கொடுப்பாய் என நம்புகின்றேன்.

நெல் வயல், பழத்தோட்டம் மற்றும் காய்கறித் தோட்டமும் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தாய். சிறப்பு. எனக்குச் சிலவகைச் செடிகளைப் பற்றி மட்டுமே தெரியும். உன் _____ இருப்பவற்றை வந்து அறிந்து கொள்கின்றேன். இப்போது என்ன காலம் நண்பா? அறுவடை காலமா, நாற்று நடும் காலமா அல்லது களையெடுக்கும் காலமா? எந்தக் காலமாக இருந்தாலும் சேற்றில் கால் வைத்து வயலில் நிச்சயமாக வேலை செய்வேன். நம் முக்கிய உணவாக நெல்லைச் சாகுபடி செய்வதில் சிறு பங்காற்றிய பெருமை வேண்டும் எனக்கு.

LIVEWORKSHEETS

நான்கு _____ ஒரு சிறிய அறைக்குள் குளித்து சலித்து விட்டது நண்பா. உன் வீட்டினருகே இருக்கும் அருவிக்கு நாம் இருவரும் குளிக்கச் செல்லலாமா? கவலை வேண்டாம். எனக்கு நன்றாக _____ தெரியும். என்னுடைய பாதுகாப்பு மிதவைகளையும் எடுத்து வருகிறேன். உன் அண்ணனையும் நாம் உடன் அழைத்துச் செல்வோம்.

சரி நண்பா, அதீத ஆர்வத்தில் இந்தக் கடிதம் சற்று நீளமானதாக அமைந்து விட்டது. அடுத்த கடிதத்தில் நீ தோட்ட வீட்டிற்குச் செல்லும் நாளையும், எத்தனை நாட்கள் அங்கிருப்பாய் எனத் தெரியப்படுத்து. _____ பெற்று நான் என்று வர முடியும் எனச் சொல்கிறேன். இப்போது விடைபெறுகிறேன்.

நன்றி.

என்றும் அன்புடன்,
அ. தமிழ்மணி

சம்மதம்	அனுமதி	தோட்டத்தில்	கடிதங்களில்	எழிலனுக்கு
விடுமுறைக்கு	பட்டியலே	நீச்சல்	சுவற்றுக்குள்	முயல்கள்

LIVEWORKSHEETS